பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

07 11 2024 7 15

வியாழக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்கா உடன் பன்முகத்தன்மை கொண்ட நல்லுறவை மேம்படுத்துவதற்கான முயற்சியை இந்தியா தொடர்ந்து மேற்கொள்ளும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. கல்வி, வேளாண்மை, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும் - ஜாம்பியாவும் முடிவு செய்துள்ளன.
3. அசாம் - பூடான் எல்லைப் பகுதியான **Darranga**–வில் குடியேற்ற சோதனைச்சாவடி இன்று திறக்கப்பட்டது.
4. தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பண்டிகைக்கால கூட்ட நெரிசலைத் தவிர்க்க வடக்கு ரயில்வே 164 சிறப்பு ரயில்களை நாளை முதல் இயக்குகிறது.
5. தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் அசாம் அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 176 ரன் எடுத்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

<<<<>>>>

அமெரிக்கா உடன் பன்முகத்தன்மை கொண்ட நல்லுறவை மேம்படுத்துவதற்கான முயற்சியை இந்தியா மேற்கொள்ளும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு செய்தித்தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. டொனால்டு ட்ரம்புக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய — அமெரிக்க ஒட்டுமொத்த பொருளாதார நட்புறவை மேம்படுத்த இந்தியா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

உலக மக்களின் அமைதி மற்றும் பாதுகாப்புக்காக இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடாவின் டொராண்டோவில் இந்திய தூதரக முகாம்கள் போதிய பாதுகாப்பு அளிக்கப்படாததால் ரத்து செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஒருசில இடங்களில் நடத்தப்பட்ட தூதரக முகாம்களில் இந்திய வம்சாவளியினர் கலந்துகொண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகள் குறித்து கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அவர் கூறினார்.

கனடாவின் பிராம்டனில் இந்து கோவிலில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தெரிவித்த அவர், இந்தியாவின் கண்டனத்தை பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

வன்முறையாளர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இந்தியா அந்நாட்டு அரசிடம் வலியுறுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆஃப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான அடிப்படையில் 50 ஆயிரம் டன் கோதுமை, மூவாயிரம் டன் மருந்துப் பொருட்கள் மற்றும் பூகம்ப மீட்புப் பணிக்கான கருவிகளும் வழங்கப்பட்டிருப்பதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் மின்னணு கட்டமைப்பு, தொழில்கள், உள்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், சிட்னி நகரில் தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இந்தியா – ஆஸ்திரேலியா இடையே ஒட்டுமொத்த ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் தொழில்கள் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் பெருமளவில் உள்ளதாக குறிப்பிட்டார்.

திரு. ஜெய்சங்கர் தமது ஆஸ்திரேலிய பயணத்தின்போது இந்திய வம்சாவளியினர் மற்றும் நியூசவுத்வேல்ஸ் மாகாண மன்ற உறுப்பினர்களையும், சிட்னி நகரில் சந்தித்துப் பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு அங்குள்ள இந்திய வம்சாவளியினர் அளித்து வரும் ஒத்துழைப்புக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் நன்றி தெரிவித்தார்.

<<<<>>>>

கல்வி, வேளாண்மை, எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியாவும் - ஜாம்பியாவும் ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

ஜாம்பியாவின் **Lusaka** நகரில் நடைபெறும் ஜாம்பியா - இந்தியா 6வது கூட்டுக் கமிஷன் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங்கும், ஜாம்பியா அமைச்சர் திரு. **Mulambo Haimbe**-யும் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து கூட்டாக ஆய்வு மேற்கொண்டனர்.

ஜாம்பியாவில் நிலவி வரும் வறட்சியை எதிர்கொள்ள இந்தியா மக்காச்சோளம் உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது.

<<<<>>>>

அசாம் - பூடான் எல்லைப் பகுதியான **Darranga-**வில் குடியேற்ற சோதனைச்சாவடி இன்று திறக்கப்பட்டுள்ளது.

பூடான் பிரதமர் திரு. லயோசந்த் ஷெரிங் முன்னிலையில் இந்த சோதனைச்சாவடியை திறந்து வைத்துப் பேசிய அசாம் மாநில ஆளுநர் திரு. லக்ஷ்மண் பிரசாத் ஆச்சார்யா, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த சோதனைச்சாவடி, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புணர்வு மற்றும் ஒத்துழைப்பின் அடையாளமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உள்துறை இணையமைச்சர் திரு. பந்தி சஞ்சய்குமார், வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<>>>

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு வரும் 13ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அங்கு தேர்தல் பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் **I.N.D.I.** கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பல்வேறு தலைவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹசாரிபாகில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திருமதி அன்னபூர்ணா தேவி ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசின் தவறான நடவடிக்கைகளால் ஜார்கண்ட் மக்கள் அதிருப்தியில் உள்ளதாகத் தெரிவித்தார்.

**Khunti**-யில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மூத்த தலைவர் திருமதி கல்பனா சோரன், ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவு செய்துள்ளதாகக் கூறினார்.

காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதள் மற்றும் இடதுசாரி கட்சித் தலைவர்களும் மாநிலத்தின் பல பகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக இம்மாதம் 13 மற்றும் 20ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

<<<>>>

பண்டிகைக் கால கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில் வடக்கு ரயில்வே 164 சிறப்பு ரயில்களை நாளை முதல் இயக்க முடிவு செய்துள்ளது.

வரும் 3 நாட்களில் மேலும் 476 ரயில்கள் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட், ஜம்மு-கஷ்மீர் பகுதிகளில் இருந்து நாட்டின் மற்ற பகுதிகளுக்கு செல்லும் பயணிகளுக்கு வசதியாக இந்த சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

வாரணாசி, பிரயாக்ராஜ், கோரக்பூர், ஹவுரா, பரவ்னி, சாப்ரா உள்ளிட்ட இடங்களில் இருந்து அதிக ரயில்கள் இயக்கப்படுவதாக வடக்கு ரயில்வேயின் தலைமைத் தகவல் தொடர்பு அதிகாரி திரு. ஹிமன்சு சேகர் உபாத்யாய் தெரிவித்துள்ளார்.

கூட்ட நெரிசல் மிக்க ரயில் நிலையங்களில் கூடுதல் பாதுகாப்புக்காக ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<>>>

தமிழகத்தில் 28 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், இவற்றின் மூலம் 2 கோடிக்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பை பெற்றிருப்பதாகவும் மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் வகையில் 9 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாய் நேரடி

அன்னிய முதலீடுகளை பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாநில அரசு மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மேம்படுத்த மத்திய அரசின் ராம்ப் திட்டத்தின்கீழ் கயிறு தொழில், உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட தொழில்கள் தொடங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஸ்டார்டப் தரச்சான்றிதழ், அறிவுசார் சொத்துரிமை போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மாநில அரசு எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஒரு பதவி – ஒரு ஓய்வூதிய திட்டம் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு பேருதவியாக அமைந்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கை கடந்த 10 வருடங்களில் முன்னாள் ராணுவத்தினருக்கான அதிகாரத்தை வலுப்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

25 லட்சத்துக்கும் மேற்பட்ட முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில் கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்தி வரும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுயநலமின்றி நாட்டுக்காக உழைத்த வீரர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த திட்டம் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்கான சிறந்த வாய்ப்புகளை பிரதமரின் வித்யாலட்சுமி திட்டம் வழங்குகிறது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள், இந்த திட்டத்தை கொண்டுவந்துள்ள மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று அசாம் அணி தனது முதல் இன்னிங்சில் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 176 ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 338 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**